மே.எ.எண்:2015/அ1/2024,
நாள்:21.05.2024

துணைப்பதிவுத்துறைத்தலைவர்
அலுவலகம், வேலூர் பதிவு மண்டலம்

பதிவுத்துறைத்தலைவர் மே.எ.எண்:48861/கே2/2021, நாள்.07.05.2024 உடன் பெறப்பட்ட அரசாணை(டி) எண்:126, வணிகவரி மற்றும் பதிவுத்(எச்2)துறை, நாள்.25.04.2024 இதன்மூலம் சார்பு செய்யப்படுகிறது.

21/5/24

துணைப்பதிவுத்துறைத்தலைவர்,
வேலூர் பதிவு மண்டலம்

21/05/2024

பெறுநர்
திரு.அ.பிரதீப் குமார்,
இளநிலை உதவியாளர்,
துணைப்பதிவுத்துறைத்தலைவர் அலுவலகம்,
வேலூர்.

நகல்:-
1. பணிப்பதிவேடு
2. முக்கிய ஆணை கோப்பு

Ind\1.cop

பதிவுத்துறை தலைவர் அலுவலகம்,
சென்னை–28

பதிவுத் துறைத் தலைவர் அலுவலகம் 21 MAY 2024 வேலூர்

மே.எ.எண்.48861/கே2/2021, நாள்.07.05.2024

அரசாணை (டி) எண்.126 வணிகவரி மற்றும் பதிவுத்(பதி2)துறை, நாள்.25.04.2024 சார்பு செய்யப்படுகிறது.

திரு.அ.பிரதீப்குமார் இளநிலை உதவியாளரின் பணிப்பதிவேட்டில் குறிப்புகளை மேற்கொள்ள வேலூர் துணைப்பதிவுத்துறை தலைவர் கோரப்படுகிறார்.

இத்துடன் தனியரது அசல் S.S.L.C மதிப்பெண் சான்று அனுப்பி வைக்கப்படுகிறது. அதனை பெற்றுக் கொண்டமைக்கு ஒப்புதல் அனுப்ப வேலூர் துணைப்பதிவுத்துறை தலைவர் கோரப்படுகிறார்.

10/5/2024

மாவட்டப்பதிவாளர்

10.5.24

பெறுநர்:
திரு.அ.பிரதீப்குமார், இளநிலை உதவியாளர்.
(வேலூர் துணைப்பதிவுத்துறை தலைவர் மூலம்)

நகல்:
1 துணைப்பதிவுத்துறை தலைவர், வேலூர்.
(அசல் S.S.L.C மதிப்பெண் சான்றுடன் பதிவு எண்.1750604/ மார்ச் 2017
2. கே1 இருக்கையாளர், பதிவுத்துறைத் தலைவர் அலுவலகம்,
3. முக்கிய ஆணைக் கோப்பு / தனி நகல் – 1.

சுருக்கம்

பொதுப்பணிகள் – தமிழ்நாடு அமைச்சுப்பணி – பதிவுத்துறை – துணை பதிவுத்துறை தலைவர் அலுவலகம், வேலூர் – கருணை அடிப்படையில் 14.12.2022 முற்பகல் முதல் தற்காலிகமாக இளநிலை உதவியாளராக பணி நியமனம் செய்யப்பட்ட திரு.அ. பிரதீப் குமார் என்பவரின் பணியை வரன்முறை செய்து – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

வணிகவரி மற்றும் பதிவுத்(எம்2)துறை

அரசாணை (டி) எண்.126

நாள் 25.04.2024
குரோதி, சித்திரை - 12,
திருவள்ளுவர் ஆண்டு, 2055.

படிக்கப்பட்டன:

1. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் நலன் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, நாள் 23.01.2020.
2. பதிவுத்துறை தலைவரின் நடவடிக்கைகள் எண்.48861/கே2/ 2021, நாள் 21.09.2022.
3. பதிவுத்துறை தலைவரின் கடிதம் எண்.48861/கே2/2021, நாள் 03.04.2024.

******

ஆணை:

மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட பதிவுத்துறை தலைவரின் கடிதத்தில், பதிவுத்துறையில், அரக்கோணம் பதிவு மாவட்டம், ஆற்காடு சார்பதிவாளர் அலுவலகத்தில் சார்பதிவாளராக பணிபுரிகையில், 18.06.2021 அன்று பணியிடை மரணமடைந்த அரசு ஊழியர் திரு.ப.அன்பு என்பவரின் மனைவி திருமதி தேவி என்பவர் தனது மகன் திரு.அ. பிரதீப் குமார் என்பவருக்கு பணிநியமனம் வழங்குமாறும் திரு.அ. பிரதீப் குமார் என்பவர் தனக்கு கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்க கோரியும் 24.02.2022 அன்று விண்ணப்பித்துள்ளனர். அன்னாரது கோரிக்கை கருணை அடிப்படையிலான பணி நியமனம் வழங்குவதற்கு சமர்ப்பிக்கப்பட்ட அனைத்து சான்றுகள்/ ஆவணங்கள்/ முன்மொழிவுகள் மற்றும் நடைமுறையிலிருந்த அரசாணைகளின்படி, பரிசீலனை செய்யப்பட்டு, கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம்

செய்யப்படுவதற்குரிய கல்வி மற்றும் வயது தகுதிகளை திரு.அ. பிரதீப் குமார் பெற்றிருந்தபடியால், அன்னாருக்கு கருணை அடிப்படையில் வேலூர் துணை பதிவுத்துறை தலைவர் அலுவலகத்தில், தற்காலிக இளநிலை உதவியாளராக மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட பதிவுத்துறை தலைவரது நடவடிக்கைகளில் பணிநியமனம் வழங்கி ஆணையிடப்பட்டுள்ளது. அதனையடுத்து திரு.அ. பிரதீப் குமார் 14.12.2022 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்து தொடர்ந்து பணிபுரிந்து வருவதாகவும் தனியரின் தற்காலிகப் பணியினை அவர் பணியில் சேர்ந்த நாளான 14.12.2022 முற்பகல் முதல் வரன்முறை செய்து ஆணை வழங்குமாறு பதிவுத்துறை தலைவர் அரசை கேட்டுக்கொண்டுள்ளார்.

2. பதிவுத்துறை தலைவரின் கருத்துரு கவனமுடன் ஆய்வு செய்யப்பட்டு, அரக்கோணம் பதிவு மாவட்டம், ஆற்காடு சார்பதிவாளர் அலுவலகத்தில் சார்பதிவாளராக பணிபுரிகையில், 18.06.2021 அன்று பணியிடை மரணமடைந்த திரு. ப.அன்பு என்பவரின் மகன் திரு.அ. பிரதீப் குமார் என்பவர் தமிழ்நாடு அமைச்சுப் பணியில் பதிவுத்துறையில் வேலூர் துணை பதிவுத்துறை தலைவர் அலுவலகத்தில், கருணையடிப்படையில் இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்த நாளான 14.12.2022 முற்பகல் முதல் அப்பணியிடத்திற்குரிய உடற்தகுதியினைப் பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு அவரது பணியை வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. இவ்வாறு முன்தேதியிட்டு பணி வரன்முறைப்படுத்துவதால், தனியர், ஆண்டு ஊதிய உயர்வு மற்றும் ஊதிய நிலுவைத் தொகை பெற உரிய விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

டி.ஜகந்நாதன்
அரசு செயலாளர்(மு.கூ.பொ.)

பெறுநர்
பதிவுத்துறை தலைவர், சென்னை-28. (இணைப்புடன்)
திரு.அ. பிரதீப் குமார், இளநிலை உதவியாளர்,
துணை பதிவுத்துறை தலைவர் அலுவலகம், வேலூர்
(பதிவுத்துறை தலைவர், சென்னை-28 மூலமாக)
இருப்புக் கோப்பு/உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

25/04/2024
பிரிவு அலுவலர்
25/04/2024